சின்னச் சின்னதாய்...

குளித்தலை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் குடியேறும் போராட்டம்

● கரூர்

கரூர் மாவட்டம் குளித்தலை ஒன்றியம் இனுங்கூர் ஊராட்சிக்கு உட்பட்ட வைரபுரியில் பட்டியலின மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் குடிநீர் உள்ளிட்ட எவ்வித அடிப்படை வசதியும் செய்து தரப்படவில்லை என கூறப்படுகிறது. மேலும், கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பு அரசு கட்டிக்கொடுத்த குடியிருப்புகளும் இடிந்து சேதமடைந்து வருகின்றன.

இதையடுத்து, சேதமடைந்த வீடுகளை சீரமைத்து தரவேண்டும். பொதுக்கழிப்பிடம் கட்டி தரவேண்டும். சாக்கடை, தார் சாலை வசதி செய்து தரவேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வைரபுரி கிளை சார்பில் குளித்தலை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு காஸ் சிலிண்டர், அடுப்பு ஆகியவற்றுடன் குடியேறும் போராட்டம் நேற்று நடைபெற்றது. போராட்டத்துக்கு, வைரபுரி கிளை செயலாளர் ராஜகோபால் தலைமை வகித்தார். இதையடுத்து, ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் பேச்சுவார்த்தை நடத்தி, 15 நாட்களுக்குள் குடிநீர் வசதி செய்து தரப்படும். தொடர்ந்து பிற கோரிக்கைகள் நிறைவேற்றி தருவதாக உறுதியளித்ததால் போராட்டம் தற்காலிகமாக தள்ளிவைக்கப்பட்டது.

சட்டப்பேரவை உறுதிமொழி குழு கரூர் மாவட்டத்தில் இன்று ஆய்வு

● கரூர்

சட்டப்பேரவை உறுப்பினர் தி.வேல்முருகன் தலைமையிலான தமிழக சட்டப்பேரவை உறுதிமொழி குழுவினர் கரூர் மாவட்டத்தில் நிலுவையில் உள்ள தமிழக அரசின் உறுதிமொழிகளில் நிறைவேற்றப்பட்டவை, நடைபெற்று வரும் பணிகள் குறித்து இன்று(அக்.23) ஆய்வு செய்ய உள்ளனர். தொடர்ந்து, கரூர் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெறுகிறது என ஆட்சியர் மீ.தங்கவேல் தெரிவித்துள்ளார்.

திருச்சி காட்டூரில் பாம்பே ஸ்வீட்ஸ் புதிய கிளையை தொடங்கி வைத்த பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி.

திருச்சி காட்டூரில் பாம்பே ஸ்வீட்ஸ் திறப்பு விழா

● திருச்சி

திருச்சி அருகே காட்டூரில் பாம்பே ஸ்வீட்ஸ் புதிய கிளை திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

தஞ்சாவூரில் 75 ஆண்டுகளாக வாடிக்கையாளர்களின் ஆதரவோடு 10 கிளைகளுடன் இயங்கி வரும் பாம்பே ஸ்வீட்ஸ் நிறுவனம், தஞ்சாவூர், பட்டுக்கோட்டையை தொடர்ந்து, திருச்சி காட்டூர் பாலாஜி நகரில் தனது கிளையை தொடங்கியுள்ளது.

திறப்பு விழாவில் பாம்பே ஸ்வீட்ஸ் உரிமையாளர் சுப்ரமணி சர்மா வரவேற்றார். பொறியாளர் சிவக்குமார் காட்டூர் கிளையை திறந்துவைத்தார். தஞ்சாவூர் வழக்கறிஞர் ராஜ்குமார், மஹாராஜா சில்க்ஸ் முகமது ரபீ, பாம்பே ஸ்வீட்ஸ் உஷா ஷர்மா, ஜெயலக்ஷ்மி, பிரதீக் ஆகியோர் குத்து விளக்கேற்றினர்.

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். விழாவில், தஞ்சாவூர் எம்.பி. முரசொலி, எம்எல்ஏ டிகேஜி.நீலமேகம், மேயர்கள் திருச்சி அன்பழகன், தஞ்சாவூர் சண்.ராமநாதன், தஞ்சாவூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் கிருஷ்ணசாமி வாண்டையார், நிலா புரமோட்டர்ஸ் சுதாகர், முன்னாள் எம்எல்ஏ ரத்தினசாமி, அதிமுக மாநகரச் செயலாளர் சரவணன், மன்னார்குடி சுனில் லுங்கட், மஹாராஜா ரெடிமேட்ஸ் ஆசிப் அலி, கிராண்ட் அசோக் உரிமையாளர் விஜயகுமார், திமுக நிர்வாகிகள் களிமேடு து.செல்வம், தஞ்சாவூர் கவுன்சிலர் மேத்தா, தாமரை இன்டர்நேஷனல் பள்ளி தாளாளர் வெங்கடேசன், நிர்மலா வெங்கடேசன், பிளாசம் ஸ்கூல் அழகப்பன், அழகம்மை அழகப்பன், தஞ்சாவூர் கிருஷ்ணா ஸ்வீட்ஸ் பாண்டுரங்கன், தரும. சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விழா ஏற்பாடுகளை பாம்பே ஸ்வீட்ஸ் சுப்ரமணி சர்மா, உஷா சர்மா, ஜெயலட்சுமி பிரதீக், அஜய், பிரகாஷ் ஷர்மா ஆகியோர் செய்திருந்தனர். பிரதிக் கவுர் நன்றி கூறினார்.

நகரில் நடப்பவை

திருச்சி

- பயிலரங்கு: எம்ஜஇடி பொறியியல் கல்லூரி, சிறப்பு விருந்தினர்- தனியார் நிறுவன அலுவலர் வி.சுவேதா, கல்லூரி, பி.பிளாக் செமினார் ஹால், குண்டூர், காலை 10.
- தீ விபத்தில்லா தீபாவளி: திருச்சி மாவட்ட தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை - ஜோஸப் கண் மருத்துவமனை, பட்டாசுகளை பாதுகாப்பாக வெடிப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, ஜோஸப் கண் மருத்துவமனை, காலை 10.30.
- சொற்பொழிவு: திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம், பெரியாழ்வார் பிள்ளைத்தமிழ் எனும் தலைப்பில் உரை- இந்து பானுபிரியா, தமிழ்ச்சங்க கூட்ட அரங்கம், மேலரண் சாலை, மாலை 6.30.

திருப்பூர் மாநகராட்சி

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

திருப்பூர் மாநகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் **ரூ.347.70 இலட்சம்** மதிப்பீட்டில் மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் நீருந்து நிலையங்களில் பகிர்மானத்தில் மதகு திறப்பாளர்கள் மற்றும் காவலர்கள் ஆகிய பணியிடங்களுக்கு வெளிக் கொணர்வு முகமை (Outsourcing) மூலம் நியமனம் செய்தல் (6 பணிகள்) பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பதிவு பெற்ற மற்றும் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரட்டை உறை ஒப்பந்தப்புள்ளி முறையில் (Two Cover System) **08.11.2024** பிற்பகல் **3.00 மணி** வரை (அலுவலக கடிகாரப்படி) இம்மாநகராட்சி ஆணையர் அவர்களால் **இ-டெண்டரிங் முறையில் மட்டுமே** வரவேற்கப்படுகிறது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை **3.30** மணிக்கு வருகை புரிந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவம் **08.11.2024**-ஆம் தேதி பிற்பகல் **2.00** மணி வரை **www.tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் E-Token / Digital Signature Card உபயோகித்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். இதர விபரங்களை மாநகராட்சி வேலை நாட்களில் பொறியியல் பிரிவில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

ந.க.எண். : E1/5210/2024
இடம். : திருப்பூர்
நாள். : 18.10.2024
செ.ம.தொா.இ/4474/ஒப்பந்தப்புள்ளி/2024

துணைஆணையாளர் (ம)
ஆணையாளர் (பொ),
திருப்பூர் மாநகராட்சி.

புதுக்கோட்டையில் 50% மேல் உறுதிமொழிகள் நிறைவேற்றம்

● சட்டப்பேரவை உறுதிமொழி குழுத் தலைவர் தகவல்

● புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டத்தில் 50 சதவீதத்துக்கும் மேலான உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என சட்டப்பேரவை உறுதிமொழிக் குழுத் தலைவர் தி.வேல்முருகன் தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவை உறுதிமொழிக் குழுவின் தலைவர் தி.வேல்முருகன் தலைமையில் அதன் உறுப்பினர்களான எம்எல்ஏக்கள் ச.அரவிந்த் ரமேஷ் (சோழிங்க நல்லூர், ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் (விருதுநகர்), சா.மாங்குடி (காரைக்குடி), எம்.கே.மோகன் (அண்ணா நகர்) உள்ளிட்டோர் நேற்று அறந்தாங்கி அரசு மருத்துவமனையை ஆய்வு செய்தனர்.

அங்கு, மருத்துவமனையை முறையாக பராமரிக்காமல் இருந்ததையும், சிமெண்ட் பூச்சு பெயர்ந்திருந்ததையும் பார்த்து அதிருப்தி தெரிவித்தனர்.

அதன் பிறகு, மழையூரில் ரூ.5.7 கோடியில் கட்டித் திறக்கப்பட்டுள்ள காவலர் குடியிருப்பு, புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.27 கோடிக்கு வாங்கப்பட்டுள்ள புதிய உபகரணங்கள் பயன்பாடு, திருவப்பூரில் ரூ.2.5 கோடியில் கட்டப்பட்டுவரும் தானிய சேமிப்புக் கிடங்கு, கல்லூரி மாணவ, மாணவிகள் விடுதி, ஆதிதிராவிடர் கல்லூரி மாணவிகள் விடுதி ஆகியவற்றை ஆய்வு செய்தனர்.

அதன்பிறகு, புதுக்கோட்டையில் தனியார் தங்கும் விடுதியில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில், அனைத்துத் துறை அலுவலர்கள் பங்கேற்று, துறை சார்ந்த விவரங்கள் குறித்துப் பேசினர்.

பின்னர், செய்தியாளர்களிடம் வேல்முருகன் கூறியது:

புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு உறுதிமொழி அளித்ததில் 50 சதவீதத்துக்கும் அதிகமான பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மற்ற மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில், இம்மாவட்டம் பின்தங்கிய நிலையில் உள்ளது. எனினும், அரசு அறிவித்துள்ள அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்படும்போது முழு வளர்ச்சி அடையும்.

புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை வளாகத்தில் தேங்கியுள்ள கழிவுகளை அற்றுவதற்கு ரூ.4 கோடியில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதை விரைந்து நிறைவேற்றுமாறு அரசுக்கு பரிந்துரை செய்யப்படும். யூக்கலிப்டஸ் மரங்களை அகற்றுமாறு உத்தரவுகள் ஏதும் இல்லை. இதுதொடர்பாக விவசாயிகள் அளித்த மனுக்களை ஆய்வு செய்யுமாறு ஆட்சியருக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்த மாநில அரசு தயங்கவில்லை. முழு விவரப் பட்டியல் மத்திய அரசின் கையில் இருப்பதால், மத்திய அரசுதான் இதைச் செய்ய வேண்டுமென மாநில அரசு கூறுகிறது.

இருந்தபோதிலும் பிஹார், ஆந்திராவில் சாதிவாரிக் கணக்கெடுப்பை மேற்கொண்டுள்ளனர். இதேபோல தமிழகத்திலும் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி வருகிறோம். தமிழகத்தில் இருந்து கள்ளச்சாராயம், போதைப் பொருள் உள்ளிட்டவை ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான் எங்கள் நிலைப்பாடு என்றார்.

ஆய்வின்போது, ஆட்சியர் எம்.அருணா, எஸ்.பி. வந்திதா பாண்டே, மேயர் திலகவதி செந்தில், சட்டப்பேரவை உறுப்பினர்கள் வை.முத்துராஜா, எஸ்.டி.ராமச்சந்திரன், கூடுதல் ஆட்சியர் அப்தால் ரசூல் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அரசு மருத்துவமனை வளாகத்தை நேற்று ஆய்வு செய்த சட்டப்பேரவை உறுதிமொழிக் குழுவின் தலைவர் தி.வேல்முருகன் உள்ளிட்டோர்.

குளித்தலையில் அதிமுக செயல்வீரர்கள் கூட்டம்

● கரூர்

கரூர் மாவட்டம் குளித்தலை சட்டப்பேரவை தொகுதி அதிமுக செயல்வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள், மக்கள்பணிகள்குறித்தகூட்டம்குளித்தலையில் நேற்று நடைபெற்றது.

கூட்டத்தில், அதிமுக பொருளாளரும், முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சி.சீனிவாசன் பேசியது: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி எப்படி முதல்வரானார் என தெரியும் என கூறியுள்ளார். குறுக்கு வழியில் முதல்வரானவர் தான் கருணாநிதி. இதை அவர்களது குடும்பத்தினரிடமே கேட்டு தெரிந்துக்கொள்ளலாம் என்றார்.

இதில், எம்ஜிஆர் இளைஞர் அணிச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான என்.ஆர். சிவபதி, முன்னாள் அமைச்சரும், மாவட்டச் செயலாளருமான எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

திருச்சி மாநகராட்சி அலுவலகத்தை நேற்று முற்றுகையிட்ட ஒப்பந்த தொழிலாளர்கள். படம்: ர.செல்வமுத்துகுமார்

திருச்சி மாநகராட்சி ஒப்பந்த பணியாளர்கள் போராட்டம்

● திருச்சி

திருச்சி மாநகராட்சி தொழிலாளர் சங்கத்தினர் நேற்று பெருந்திரள் முறையீடு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருச்சி மாநகராட்சியில் அவுட்சோர்சிங் நிறுவனத்தில் ஒப்பந்த முறையில் பணிபுரிந்து வரும் தூய்மைப் பணியாளர்கள், வாகன ஓட்டுநர்கள் ஆகியோருக்கு ஒப்பந்தத்தில் தெரிவித்த ஊதியத்தை வழங்காமல் குறைத்து வழங்குவதைக் கண்டித்தும், ஒப்பந்த விதிகளின்படி ஒரு மாத ஊதியத்தை போனஸ் ஆக வழங்கக் கோரியும் இந்த போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்துக்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் இளையராஜா தலைமை வகித்தார்.

கஞ்சா விற்ற 2 பேர் கைது

● திருச்சி

திருச்சி பாலக்கரை பகுதியில் மதுவிலக்கு பிரிவு போலீஸார் நேற்று முன்தினம் ரோந்து சென்றனர். அப்போது, அங்கு கஞ்சா விற்ற ராம்ஜிநகர் காந்திநகரைச் சேர்ந்த மாயகிருஷ்ணன்(39) என்பவரை கைது செய்து, 1.150 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

திருச்சி கே.கே.நகர் காவல் ஆய்வாளர் கோசலைராமன் தலைமையிலான போலீஸார், ரேஸ்கோர்ஸ் சாலையில் நேற்று முன்தினம் ரோந்து சென்றபோது, அரியமங்கலம் காமராஜர் நகரைச் சேர்ந்த நிவாஸ்பாபு(25) என்பவர் போதை மாத்திரைகளை விற்பனைக்கு வைத்திருந்தது தெரிய வந்தது.

இதையடுத்து, போலீஸார் அவரை கைது செய்து, 300 போதை மாத்திரைகளை பறிமுதல் செய்தனர். இதுதொடர்பாக, காட்டூர் அண்ணாநகரைச் சேர்ந்த சந்தோஷ்(25), அரியமங்கலம் காமராஜர் நகரைச் சேர்ந்த கவி(25) ஆகிய இருவரிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வேப்பூர் ஒன்றியத்தில்

16 பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்

● பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட பகுதிகளில் ரூ.11.98 கோடியில் பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு பூமிபூஜை வரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் நேற்று அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார். ஆட்சியர் கிரேஸ் பச்சாவ் தலைமை வகித்தார்.

இதில், பெருமத்தூர் ஊராட்சியில் ரூ.1.44 கோடியில் மழவராய நல்லூர் முதல் காருகுடி, பெருமத்தூர் வரை தார் சாலை அமைக்கும் பணி, ரூ.1.32 கோடியில் பெருமத்தூர் முதல் பெருமத்தூர் குடிக்காடு வரை தார் சாலை அமைக்கும் பணி, பீல்வாடி ஊராட்சியில் ரூ.1.65 கோடியில் பேரளி முதல் பீல்வாடி வரை தார் சாலை அமைக்கும் பணி, தலா ரூ.34 லட்சத்தில் ஓலைப்பாடி மற்றும் திருமாந்துறை ஆகிய ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் கூடுதலாக 2 வகுப்பறை கட்டிடம் கட்டும் பணி, ரூ.3.05 கோடியில் நன்னை முதல் லப்பைக்குடிக்காடு வரை ஒரு வழிபாதையை இருவழி சாலையாக தரம் உயர்த்தும் பணி, அகூர் ஊராட்சியில் ரூ.3.35 கோடி மதிப்பில் பெரம்பலூர்-அரியலூர் சாலையில் இருந்து அகூர் வழியாக ஆய்க்குடி வரை செல்லும் சாலையை அகலப்படுத்தும் பணி என ரூ.11.98 கோடி மதிப்பிலான 16 புதிய பணிகளுக்கு அமைச்சர் அடிக்கல் நாட்டினார். மேலும், வேப்பூர் ஒன்றிய அலுவலகம் அருகில் பேருந்து நிழற்குடையை அமைச்சர் சிவசங்கர் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு அரசு
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
தாராபுரம் நகராட்சி
ந.க.எண்.6615/2023/இ1 — மின்னணு ஒப்பந்தப்புள்ளி - (இரு உறை முறை) — நாள் : 18.10.2024
இரண்டாம் அழைப்பு - தூய்மை பாரத இயக்கம்(ந) 2.0, 2023-24

1. தாராபுரம் நகராட்சி உரக்கிடங்கு வளாகத்தில் 10 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி.
2. பணியின் மதிப்பீடு **ரூ. 1421.00 இலட்சம்.**
3. பணியின் டேவணித் தொகை மதிப்பீட்டு தொகைக்கு 1% ஒரு சதவீதம்.
4. ஒப்பந்தப்புள்ளி முன்னோடி ஆய்வுக்கூட்டம் **13.11.2024** அன்று **முற்பகல் 11.00** மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும்.
5. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான விவரங்களை **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
6. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரியில் **23.10.2024** முதல் **28.11.2024** அன்று **பிற்பகல் 3.00 மணி** வரை இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
7. ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்:- **28.11.2024** அன்று **பிற்பகல் 03.00 மணி** வரையில்
8. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: **28.11.2024** அன்று **பிற்பகல் 3.30 மணி,** நகராட்சி அலுவலகம், தாராபுரம்.
9. ஒப்பந்ததாரருக்கான தகுதி விவரங்களை **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
10. பணிக்கான முன்வைப்புத் தொகையினை ஆணையாளர் தாராபுரம் நகராட்சி (**The Commissioner, Dharapuram Municipality**) என்ற பெயரில் வங்கி வரைவோலையாக தனி உறையில் வைத்து **28.11.2024** அன்று **பிற்பகல் 3.00** மணிக்கு முன்பாக நகராட்சி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

செ.ம.தொா.இ/ 4464 /ஒப்பந்தப்புள்ளி/2024 — **ஆணையாளர், தாராபுரம் நகராட்சி**

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
(கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், திருநெல்வேலி
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி எண்.48/2024–2025/தவ.அ/நாள்:18.10.2024

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர்(நெ) க(ம)ப, திருநெல்வேலி வட்டம் அவர்களால், **நாகர்கோவில் (4 வேலைகள்) (நெ), க(ம)ப கோட்டம்** சார்ந்த **சிறப்பு பழுதுபார்த்தல் 2024–25 பணிகளுக்கு** இணைய வழியாக **ஒரு உறை முறையில் சதவீதம்** ஒப்பந்தப்புள்ளிகள் **11.11.2024 – 14.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **26.10.2024 முதல்** தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள்/மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொா.இ/4421/ஒப்பந்தப்புள்ளி/2024 — **கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப வட்டம், திருநெல்வேலி**

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071.
கிளை அலுவலகம் : எண். 74, லக்கி லேன் பிளாசா, சாலை ரோடு, தில்லை நகர், திருச்சி-620018.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **மின் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	தற்போதைய நிலுவை தொகை 17.10.2024 அன்று	சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	46049420000544 & 46049430001511	1) திரு. கலைசெல்வன், 2) திருமதி. திவ்யா, 3) திரு. கோவிந்தராஜ்	22-06-2022	17-09-2022	ரூ.62,97,630.10 (ரூபாய் அறுபத்தி இரண்டு இலட்சத்து தொண்ணூற்றி ஏழாயிரத்து அறுநூற்றி முப்பது மட்டும் பைசா பத்து மட்டும்)	08.11.2024 காலை 09.30 மணிமுதல் மாலை 05.00 மணிவரை	ரூ.16,95,000/- (ரூபாய் பதினாறு இலட்சத்து தொண்ணூற்றி ஐந்தாயிரம் மட்டும்)	ரூ.1,69,500/- (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்தி ஒன்பதாயிரத்து ஐநூறு மட்டும்)	22.11.2024 நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 02.00 மணிவரை	21.11.2024, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.74, லக்கி லேன் பிளாசா, சாலை ரோடு, தில்லை நகர், திருச்சி - 620018.
	அட்டவணை சொத்து : திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டம், திருவெறும்பூர் தாலுகா, திருவெறும்பூர் சார் பதிவு மாவட்டம், பூலங்குடி கிராமம், சர்வே எண். 22/16 தற்போது புதிய சர்வே எண். 112/7 அளவுகள் ஏக்கர் 5.00 சென்ட் நிலத்தில் ஏக்கர் 3.00 சென்ட்ஸ் பரப்பு வீட்டு மனைகள் லேஅவுட்டாக பிரிக்கப்பட்டது, இதில் மனை எண். 3, அளவுகள் 3825 சதுர அடி மற்றும் பின்வரும் **நான்கு எல்லைகள் : வடக்கில் :** மனை எண்.4, **மேற்கில் :** ராமாயீ அவர்களின் புஞ்சை நிலம், **தெற்கில் :** மனை எண்.2, **கிழக்கில் :** வடக்கிலிருந்து தெற்கு சாலை. இந்த எல்லைகள் பரப்பளவு கிழக்கிலிருந்து மேற்கு வடக்காக 115 லிங்க்ஸ் சமமான 76 1/2 அடி, தெற்காக 115 லிங்க்ஸ் சமமான 76 1/2 அடி மற்றும் வடக்கிலிருந்து தெற்கு மேற்காக 75 லிங்க்ஸ் சமமான 50 அடி, கிழக்காக 75 லிங்க்ஸ் சமமான 50 அடி மொத்த பரப்பளவு 3825 சதுர அடி (355.351 சதுர மீட்டர்) மனை மற்றும் அதில் கட்டப்பட்ட வீடு மற்றும் அனைத்து வழக்கமான பாதை மற்றும் அது தொடர்பான அடிப்படை உரிமைகள். மேற்குறிப்பிட்ட சொத்தானது திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் தாலுகா, திருவெறும்பூர் பஞ்சாயத்து பூனியன், பாலன்கனன்குடி பஞ்சாயத்து எல்லைகளுக்குட்பட்டது.									
2	46049420000557 & 46049420000698	1) திரு. மாரிமுத்து P 2) திருமதி. சித்ரா	08-07-2022	17-09-2022	ரூ.15,87,943.86 (ரூபாய் பதினைந்து இலட்சத்து எண்பத்தி ஏழாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி மூன்று மற்றும் பைசா எண்பத்தி ஆறு மட்டும்)	08.11.2024 காலை 09.30 மணிமுதல் மாலை 05.00 மணிவரை	ரூ.2,32,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பத்தி இரண்டாயிரம் மட்டும்)	ரூ.23,200/- (ரூபாய் இருபத்தி மூன்றாயிரத்து இருநூறு மட்டும்)	22.11.2024 நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 02.00 மணிவரை	21.11.2024, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.74, லக்கி லேன் பிளாசா, சாலை ரோடு, தில்லை நகர், திருச்சி - 620018.
	அட்டவணை சொத்து : திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சி மாவட்டம், திருச்சி இணை 3 சார் பதிவு அலுவலகம், ஸ்ரீரங்கம் தாலுகா, எண்.7, அந்தநல்லூர் கிராமம், நத்தம் மனை வாரிபட்டா எண். 538, சர்வே எண்கள். 254/5 மற்றும் 254/6 - 00276 சதுர மீட்டர்கள் சொத்து இதில் 616 1/2 சதுர அடி சொத்து மற்றும் பின்வரும் **நான்கு எல்லைகள் : தெற்கு :** பாஸ்கரன் அவர்களுக்கு சொந்தமான B அட்டவணை சொத்து, **மேற்கு :** காக்கயன் முத்திரையார் சொத்து, **வடக்கு :** விஜயராணி அவர்களின் D அட்டவணை சொத்து, **கிழக்கு :** மருதை முத்திரையார் வீட்டு சைட். இதன் நான்கு எல்லைகள் கிழக்கு மேற்கு 36 அடி வடக்கே, 34 அடி தெற்கே, வடக்கு தெற்கு 17 1/2 அடி இருபக்கமும், மொத்தம் 616 1/2 சதுர அடி சொத்து மற்றும் அதில் கட்டப்பட்ட கட்டிடம் மற்றும் மின்சார இணைப்பு மற்றும் அதன் வைப்பு மற்றும் அனைத்து பாதை மற்றும் அடிப்படை உரிமைகள். கதவு எண். 2/90 A பகுதி, வரி அசெஸ்மெண்ட் எண். 764, 765 மற்றும் 766 பாதை உரிமை அத்துடன் 5 அடி அகல வடக்கு தெற்கு பொது பாதை விஜயராணி சொத்து வரை.									

மின் ஏலமானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **"ஆன்லைனில்"** நடத்தப்படும். மேலே கூறப்பட்ட சொத்தை வாங்குவது தொடர்பான அனைத்து தொகைகளும் **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** பெயரில் வழங்க வேண்டும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் இணையதள ஏற்பாட்டின் **M/s. 4 Closure** இணையதளம் **https://bankauctions.in & www.foreclosureindia.com** மூலம் ஏலம் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு, விதிகள் மற்றும் ஆன்லைன் மின்-ஏல பயிற்சி, விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின் ஏல டெண்டர் ஆவணம் ஆகிய தொடர்புக்கு **M/s. 4 Closure, தொடர்பு திரு.M. தினேஷ், தொடர்பு எண். 8142000735. Email id: info@b